ඉඩම් පරිහරණ ප්‍රතිපත්ති සැලසුම් දෙපාර්තමේන්තුව

காணிஉபயோகக்கொள்கைத்திட்டமிடல்திணைக்களம்

**Land Use Policy Planning Department**

# 2016

## කාර්ය සාධන වාර්තාව

## செயற்திறன்அறிக்கை

## Performance Report

ඉඩම් පරිහරණ ප්‍රතිපත්ති සැලසුම් දෙපාර්තමේන්තුව

காணிஉபயோகக்கொள்கைத்திட்டமிடல்திணைக்களம்

Land Use Policy Planning Department

# 2016

## කාර්ය සාධන වාර්තාව

## செயற்திறன்அறிக்கை

# Performance Report

## உள்ளடக்கம்

01. அறிமுகம்

1.1 நோக்கு

1.2 குறிக்கோள்

1.3 நோக்கங்கள்

1.4 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் பணிகள்

02. நிறுவனக் கட்டமைப்பு

03. மனிதவள முகாமைத்துவம்

3.1 பணியாட்தொகுதி கட்டமைப்பு

3.2 இடமாற்றங்கள்

3.3 தாபன நடவடிக்கைகள்

3.4 மனிதவள அபிவிருத்தி

04. நிதி முகாமைத்துவம்

4.1 செலவு மதிப்பீடு-2016

4.2 பௌதீக வளங்கள் முகாமைத்துவம் -2016

05. அபிவிருத்தி நடவடிக்கைகள்

5.1 பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுலாக்கல்

5.2 மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு

5.3 பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு

5.4 தேசிய காணிப் பயன்பாடு பற்றிய ஆய்வு

5.5 நீர்மூலங்கள் மற்றும் நீரூற்றுக்களை அடையாளங் காணல்

5.6 கிராம மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை அமுலாக்கம்

5.7 தரமிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம்

5.8 பாடசாலைப் பிள்ளைகளுக்கும், சமூகத்திற்கும் விழிப்புணர்வுத் திட்டம்

5.9 விசேட திட்டங்கள்

5.10 ஏனைய திட்டங்கள்

5.11 வருடாந்த வேலைத்திட்டம் பற்றிய கருத்தரங்கு

5.12 மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்

## காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்

## 01. அறிமுகம்

"காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் பிரிவு" காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஒரு பிரிவாக, இந்நாட்டிற்கு விஞ்ஞான ரீதியிலான காணிப் பயன் பாட்டுத் திட்டமிடலை அறிமுகப்படுத்தும் நோக்கில் 1983ம் ஆண்டில் ஸ்தாபிக்கப் பட்டது. நாட்டின் தேவையினை கருத்திற் கொண்டும், பிரிவின் செயற்பாடுகள் விரிவாக்கப்பட்டதனாலும் அதனைத் தொடர்ந்து பிரிவின் பொறுப்புக்கள் அதிகரித்தனாலும் 2010ம் ஆண்டில் திணைக்களமாக தரமுயர்த்தப்பட்டது.

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் (கா.ப.கொ.தி.தி) தலைமையகம் நாரஹென்பிட்டியில் அமைந்துள்ளது. இதன்கீழ் 25 மாவட்ட அலுவலகங்கள் இயங்குகின்றன. மாவட்ட அலுவலகங்களிற்கு பொறுப்பாளர்களாக மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் 1988ம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். 2015 மார்ச் 31ம் திகதி முதல் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் தகுதியின் அடிப்படையில் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) ஆக நியமனம் பெற்றார்கள். அத்துடன் வெற்றிடமாகவிருந்த 11 பதவிகளுக்கும் போட்டிப் பரீட்சை மூலம் 11 உதவிப் பணிப்பாளர்கள் (மாவட்ட காணிப் பயன்பாடு) 2016.11.01ம் திகதி நியமிக்கப்பட்டார்கள். 2016.12.31ம் திகதியில் மொத்தமாக 23 உதவிப் பணிப்பாளர்கள் (மாவட்ட காணிப் பயன்பாடு) உள்ளனர். உதவி காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் அறுபத்தியிரண்டு பேர் 1994 மற்றும் 1999ம் ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பின்னர் பிரதேச செயலக மட்டத்தில் 269 காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர்கள் 2005ம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். முன்னைய உதவி காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் மற்றும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உதவியாளர் ஆகிய பதவிகள் 2014.12.11ம் திகதி முதல் "காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்" என ஒரு பதவியாக் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி தற்போது காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள் 294 பேர் உள்ளனர். மேலும் வெளிக்கள செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக பட்டதாரிகளை சேர்த்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் 176 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 2013 மற்றும் 2014ம் ஆண்டுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 193 பேர் உள்ளனர். தலைமை அலுவலகத்தில் உதவிப் பணிப்பாளர் (விவசாயப் பொருளியல்) பதவி மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலம் 2015 மே 15ம்திகதி முதல் நிரப்பப்பட்டது.

## 1.1 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் நோக்கு

"இலங்கையின் நிலவளங்களை மிகச்சிறப்பாகவும் வளங்குன்றாத நிலையிலும் பயன்படுத்தல்" .

## 1.2 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் குறிக்கோள்

நிலவளத்தை மிகச்சிறப்பாக பயன்படுத்தலை நிறைவேற்றுவதற்காகவும் எமது பங்காளர்களையும் நிலப் பாவனையாளர்களையும் திருப்திப்படுத்துவதற்காகவும் சாமர்த்தியமும் பொறுப்புணர்வுமுள்ள பணியாளர்களால் கொள்கைகளை வகுத்தல், திட்டங்களை உருவாக்குதலுடன் நில வளங்குன்றாத நிலையினையும் சூழற் சமநிலையையும் பேணுதலுமாகும்.

## 1.3 கா.ப.கொ.தி.தி.இன் பிரதான நோக்கங்கள்

1. இலங்கைக்கான தேசிய காணி உபயோகக் கொள்கைகளை அமுல்படுத்தத் தேவையான சட்டப் பின்னணியை உருவாக்கல்.
2. இலங்கைக்கான தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.
3. மட்டுப்படுத்தப்பட்ட வளமான நிலவளத்தை, மனித மேம்பாட்டிற்காக, சுற்றாடல் சமநிலையை பேணும் வகையில் பயன்படுத்தக் கூடியவாறு பொருத்தமான தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்கல்.
4. நிலத்தை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின் போது நிலவளத்தின் பாதுகாப்பும் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையும் உறுதிப் படுத்துமாறு நடவடிக்கை மேற்கொள்வதற்கு உரிய சிபாரிசுகளையும் பணிப்புரைகளையும் வழங்கல்.
5. விஞ்ஞான ரீதியிலான காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் தொடர்பில் அறிவு, ஆற்றல், பயிற்சி என்பன விஸ்தரிக்கப்படுமாறு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்தல்.

## 1.4 காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் செயல்பங்கு

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் செயற்பாடுகள் இரு மட்டங்களிலாகும்.

**(அ) பேரளவுமட்டம்( Macro level)**

இம்மட்டத்தில் மாகாணம், மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படும். எல்லா மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர் பிரிவுகளிற்கு காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை அமுலாக்கும் திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டங்களுக்கு மாவட்ட காணிப் பயன்பாட்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டது.

**(ஆ) நுண்மட்டம்( Micro level)**

இம்மட்டத்தில் கிராம மட்டத்திலான காணிப்பயன்பாட்டு திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுலாக்கல், தரமிழக்கப்பட்ட நிலங்களை புனரமைப்பதற்கான திட்டங்களை தயாரித்தல் மற்றும் அமுலாக்கல், அரச அலுவலக வளவில் மற்றும் பாடசாலைகளிலுள்ள வெற்றுக் காணிகளில் திறமையான காணிப் பயன்பாடு பற்றிய செய்து காட்டல், அரச நிறுவனங்களின் வேண்டுகோளுக்கு இணங்க பயன்படுத்தப்படாத காணிகளில் காணிப் பொருத்தப்பாடு பற்றிய கற்கைகளை மேற்கொள்ளல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

மேலுள்ள காணிப் பயன்பாட்டு திட்டமிடற் செயற்பாடுகளிற்கு பின்வரும் செயற்பாடுகள் ஆதரவளிக்கும்.

1. வெவ்வேறு மட்டத்திலான காணிப் பயன்பாட்டு திட்டமிடல் நடவடிக்கை களுக்காக காணிப் பயன்பாட்டுத் தகவல் முறைமையை பராமரித்தல்.
2. மாவட்ட மட்டத்திலான காணிப் பயன்பாட்டு வரைபடங்களை தயாரித்தல்.
3. காணிகளை பயன்படுத்துவோர், காணி சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் நன்மைக்காக விழிப்புணர்வு கூட்டங்களை நடாத்துதல்.
4. மாவட்ட, பிரதேச மட்டத்தில் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படும் காணிப் பயன்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக காணிப் பயன்பாட்டு திட்டமிடற் குழு கூட்டங்களை மாவட்ட, பிரதேச மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.

## காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்நிறுவனக் கட்டமைப்பு

# 3. மனித வள முகாமைத்துவம்

## 3.1 பணியாட் தொகுதி கட்டமைப்பு

| தொ. இல. | அனுமதிக்கப்பட்ட பணியாட்தொகுதி | பதவிகளின் எண்ணிக்கை | முந்திய வருடத்தில் எண்ணிக்கை | வருடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் -2016 | | | | | நடப்பு வருடத்தில் எண்ணிகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஓய்வு பெற்ற | இடமாற்றம் | | ஆட் சேர்ப்பு | பதவி உயர்வு | |
| | | | | | சென்ற | வந்த | | | |
| 01 | பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 02 | பணிப்பாளர்(நிருவாகம்) | 01 | - | - | - | - | - | - | - |
| 03 | பணிப்பாளர் (திணைக்களம்) | 01 | - | - | - | - | - | - | - |
| 04 | பிரதான கணக்காளர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 05 | உள்ளக கணக்காய்வாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| 06 | கணக்காளர் | 01 | - | - | - | - | 01 | - | 01 |
| 07 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர்(இ.நி.சே) | 04 | 01 | - | - | - | - | - | 01 |
| 08 | உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர்(தகவல்முறைமை) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 09 | உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (சமூகவியல்) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 10 | உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (பயிராக்கவியல்) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 11 | உதவிப் பணிப்பாளர்/ பிரதிப் பணிப்பாளர் (விவசாயப் பொருளாதாரம்) | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 12 | உதவிப் பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர் (கா.ப.தி) | 25 | 13 | 01 | - | - | 11 | | 23 |
| 13 | கணிணி முறைமைப் பகுப்பாளர் /நிரலாக்குனர் | 01 | 01 | - | - | - | - | - | 01 |
| 14 | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர், | 294 | 294 | - | 02 | - | - | 11 | 281 |
| 15 | அரச முகாமைத்துவ உதவியாளர் (அதி சிறப்பு வகுப்பு) | 01 | - | 01 | - | - | 01 | - | - |
| 16 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 200 | 193 | - | 03 | 03 | - | - | 193 |
| 17 | வரவுசெலவுத் திட்டஉதவியாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| 18 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 50 | 28 | - | 06 | 05 | - | - | 27 |
| 19 | தகவல் தொடர்பு தொழில்நுட்ப உதவியாளர் | 02 | 02 | - | - | - | - | - | 02 |
| 20 | சாரதி | 34 | 29 | - | 02 | 01 | | - | 28 |
| 21 | அலுவலக உதவியாளர் | 37 | 36 | - | 02 | 02 | | - | 36 |
| 22 | வரைபடவினைஞர் | 25 | 19 | 01 | - | - | - | - | 18 |
| 23 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்அல்லாத) | 11 | 11 | - | - | - | | - | 11 |
| 24 | பங்களா பொறுப்பாளர் | 01 | - | - | - | - | - | - | - |
| | **மொத்தம்** | **696** | **633** | **03** | **15** | | **13** | **11** | **628** |

## 3.2 இடமாற்றம்

| இல. | பெயர் மற்றும் பதவி | இடமாற்றம் பெற்றுச் சென்ற | | இடமாற்றம் பெற்று வந்த | | |
|---|---|---|---|---|---|---|
| | | திகதி | இடமாற்றலாகி சென்ற இடம் | பின்வருநர் பெயர் | திகதி | இடமாற்ற பெற்ற இடம் |
| 01 | திருமதி..டி.எம்.இனோதினி தம்பவிட்ட உதவிப் பணிப்பாளர் | 2016.05.16 | தலைமைச் செயலாளர் அலுவலகம் - வடமேல் மாகாணம் | - | - | - |
| 02 | திருமதி.டபி.எம்.சீ.கே. ஆரியரத்ன -அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2016.02.01 | பிரதேச செயலகம் - தெகியோவிட்ட | திருமதி.எம்.ஆர்.பீ.ஆர்.பீ.கே. மடகபொல | 2016.02.05 | பிரதேச செயலகம் - நாவுல |
| 03 | திருமதி.யதர்சனி ஞானரத்தினம்- அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | - | - | 2016.03.14 | காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம் |
| 04 | திரு. ஈ.ஏயு.கே. எதிரிசிங்க அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.01.01 | பிரதேச செயலகம் - கேகாலை | எவ்.கே.பீ.கேவா விதாரண - அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.01.01 | பிரதேசசெயலகம் - கேகாலை |
| 05 | டபி.ஜீ.சேனா அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.03.04 | தேசிய வைத்தியசாலை | திருமதி.கே.சீ. சுமணசிறி -அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.03.02 | ஸ்ரீபாலி வித்தியாலயம் ஹொரண |
| 06 | செல்வி.ஜே.டபி.எஸ்.ஆர். சில்வா.- அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.03.08 | பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் | திரு.எல்.வி.ஏ.யு. குமார அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.03.01 | மண்டல தொழிலாளர் அலுவலகம் - அனுராதபுரம் |
| 07 | திரு. ஏ.எம்.ஜீ.அதிகாரி அரசமுகாமைத்துவஉதவியாளர் | 2016.05.09 | நிதி அமைச்சு | திருமதி.எஸ்.எம்.சீ.பீ. செனவிரத்ன அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.06.01 | மாவட்ட காணிபதிவாளர் அலுவலகம் - மாத்தளை |
| 08 | திருமதி. கே.ஜீ.எஸ். மானின்கமுவ அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.06.01 | மாவட்ட காணிப்பதிவாளர் அலுவலகம் - மாத்தளை | திரு.கே.எம்.டி.கே.சி. சேனாரத்ன அரச முகாமைத்துவ உதவியாளர் | 2016.05.09 | சட்ட வரைஞர் திணைக்களம் |
| 09 | திரு.ஏ.எம்.றமீஸ் அலுவலக உதவியாளர் | 2016.07.01 | பிரதேச செயலகம் - தம்பலகாமம் | திரு.யு.எல்.ரி.சோமபால அலுவலகஉதவியாளர் | 2016.07.01 | பிரதேச செயலகம் - தம்பலகாமம் |
| 10 | திரு.யு.எம்.எம்.எஸ்.செனவிரத்ன பண்டா- சாரதி | 2016.07.01 | பிரதேச செயலகம் - வெலிஓயா | திரு.பி.எல்.என். லியனகே - சாரதி | 2016.07.01 | பிரதேச செயலகம் - வெலிஓயா |
| 11 | - | - | - | திரு.எம்.ஏ சங்கல்ப்ப அலுவலக உதவியாள | 2016.10.12 | பிரதேச செயலகம் - திம்பிரிகஸ்யாய |
| 12 | திரு.எம்.எம்.டி.ஜயசிறி அபிவிருத்தி உத்தியோகத்தர் | - | - | - | 2016.07.13 | பிரதேச செயலகம் - வெலிகேபொல |

## 3.3 தாபன நடவடிக்கைகள்

| தொடர் இல. | விபரங்கள் | கடந்தவருடம் (2015) | | | நடப்புவருடம் (2016) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெறப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | மிகுதி | பெறப்பட்ட எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட எண்ணிக்கை | மிகுதி |
| 01 | ஆட்சேர்ப்பு | 09 | - | - | 11 | - | - |
| 02 | நடத்தப்பட்ட பரீட்சைகள் | 03 | - | - | 01 | - | - |
| 03 | நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் | 04 | - | - | 02 | - | - |
| 04 | பதவி நிரந்தரமாக்கப்பட்டவை | 03 | - | - | 02 | - | - |
| 05 | பதவி உயர்வுகள் | 01 | - | - | 126 | - | - |
| 06 | சம்பள உயர்வு செலுத்தியவை | முழுவதும் | முழுவதும் | - | முழுவதும் | முழுவதும் | - |
| 07 | சேவைநீடிப்பு | - | - | - | - | - | - |
| 08 | ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தயாரிக்கப்பட்டவை | - | - | - | 05 | - | - |
| 09 | பதவி வெறிதாக்கல் | 01 | 01 | - | 01 | - | - |
| 10 | வேலை தடையுத்தரவு | - | - | - | - | - | - |
| 11 | மீளச் சேர்த்தல் | - | - | - | - | - | - |
| 12 | ஒழுங்கு விசாரணைகள் | - | - | - | - | - | - |
| 13 | வெளிநாடு செல்ல லீவு | 13 | - | - | 03 | - | - |
| 14 | வெளிநாட்டு புலைமைப் பரிசில் | 07 | - | - | - | - | - |
| 15 | மந்திரிசபை குறிப்பு | - | - | - | - | - | - |
| 16 | கையெழுத்திட்ட பிணைகள் | - | இல்லை | - | - | - | - |
| 17 | விடுதலையான பிணைகள் | - | இல்லை | - | - | - | - |
| 18 | அனுமதிக்கப்பட்ட கடன் (இடர்) | 151 | 151 | - | 127 | 127 | - |
| 19 | சொத்து | 09 | 09 | - | 05 | 05 | - |
| 20 | வாகனங்கள் | - | - | - | - | - | - |
| 21 | ஏனையவை | 142 | 142 | - | 122 | 122 | - |
| 22 | விடுவிக்கப்பட்டது | 05 | - | - | 07 | - | - |

## 3.4 மனிதவளஅபிவிருத்தி

| தொ .இல- | பயிற்சிநெறி | பெயர் | பதவி | நாடு | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | உயர் ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சி நெறி | திரு.கே.எச்.நிலந்த | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | இந்தியா | 02 மாதங்கள் |
| 02 | இலங்கையின் பொருளாதார மீள்திறனை ஊக்குவிக்க அவுஸ்திரேலியாவின் காணி நிர்வாக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல். | திருமதி. சாந்தி பெர்னாந்து | பணிப்பாளர் நாயகம் | அவுஸ் திரேலி யா | 01 கிழமைகள் |
| 03 | அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பற்றிய கருத்தரங்கு | திரு.ஐ.எல். மொகமட் சாஹீர்; | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | சீனா | 02 கிழமைகள் |
| 04 | பட்டப்பின் படிப்பு | திருமதி.கே.ஏ.ரி. ககந்தவல | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | அவுஸ் திரேலி யா | 02 வருடங்கள் |
| 05 | உயர்ந்த உற்பத்தித் திறனிற்கு உணர்ச்சி சமநிலை | திரு.கே.டி. நந்தன | கணக்காளர் | இந்தியா | 10 நாட்கள் |
| | | திரு.பி.ஏ.ஜயனந்த | பிரதிப் பணிப்பாளர் (காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல்) | | |
| | | செல்வி. வசந்தகுமாரி | பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) | | |
| | | திருமதி.ருச்சிரா லக்மாலி விக்கிரமரத்ன | உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) | | |
| | | செல்வி. சந்திரா செனிவிரத்ன | உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) | | |
| | | திரு.ரிக்கிரி பண்டார | உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) | | |
| | | திரு.எம்.ஏ.நஜீப் | உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) | | |
| | | திருமதி.எஸ்.ஏ.என்.எல். சமரதுங்க | உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப்பயன்பாடு) | | |
| 06 | நகர்ப்புற முகாமைத்துவ திட்டங்களுக்கு இடம் சார் தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் சான்றிதழ் பாடநெறி | திரு.ஏ.என்.ஜே. பெர்னாந்து | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | இந்தியா | 02 மாதங்கள் |
| 07 | நிலையான கிராமப்புற வளர்ச்சிக்கு இயற்கை வள முகாமைத்துவம் | திரு.ரி. ஜெகதீஸ்வரன் | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | இந்தியா | 01 மாதங்கள் |
| 08 | காணி அபிவிருத்தி கொள்கைகள் முகாமைத்துவம் | திருமதி. பி.எஸ். எதிரிவிக்கிரம | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் | கொரியா | 03 கிழமைகள் |

## வெளிநாட்டுப் பயிற்சி

## உள்நாட்டுப் பயிற்சி

| இல. | பயிற்சித் திட்டம் | அலுவலர்கள்; எண்ணிக்கை | அலுவலர்கள் | நிறுவனம் | காலஅளவு |
|---|---|---|---|---|---|
| 01 | அடிப்படை உற்பத்தித் திறன் | 02 உத்தியோகத்தர்கள் | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் | தேசிய உற்பத்தித்திறன்; செயலகம் | 01 நாள் |
| 02 | பன்முக அளவுகோல் பகுப்பாய்வு | 15 உத்தியோகத்தர்கள் | பிரதிப்பணிப்பாளர் (காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல்), உதவிப் பணிப்பாளர்கள், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள் | நிறுவனம் | 01 நாள் |
| 03 | ஜீ.ஐ.எஸ் பயிற்சி | 17 உத்தியோகத்தர்கள் | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள்; அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | பேராதனைப் பல்கலைக்கழகம் | 05 நாட்கள் |
| 04 | ஜீ.ஐ.எஸ், ஜீ.பி.எஸ் பயிற்சி | 23 உத்தியோகத்தர்கள் | காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள்; அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகம் - மொனராகலை | 01 நாள் |
| 05 | பசுமையான உற்பத்தித்திறன் பயிற்சி | 04 உத்தியோகத்தர்கள் | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள்; அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் | தேசிய உற்பத்தித்திறன்; செயலகம் | 01 நாள் |
| 06 | ஆங்கில மொழி மற்றும் பேச்சுப் பயிற்சி | 01 உத்தியோகத்தர்கள் | பிரதிப்பணிப்பாளர் (நிருவாகம்) | அரசகரும மொழிகள் திணைக்களம் | 06 மாதங்கள் |
| 07 | தீ பரவல் தடுக்கும் பயிற்சி | 63 உத்தியோகத்தர்கள் | தலைமை அலுவலக உத்தியோகத்தர்கள் சகலரும் | தீ அணைக்கும் சேவை திணைக்களம் | 01 நாள் |
| 08 | பட்டப்பின் படிப்பு | 03 உத்தியோகத்தர்கள் | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள்; அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | பேராதனை, களனி பல்கலைக்கழகங்கள் | 02 வருடங்கள் |
| 09 | அடிப்படை உற்பத்தித் திறன் கருத்தாக்கம் | 02 உத்தியோகத்தர்கள் | கணக்காளர், பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) | தேசிய உற்பத்தித்திறன்; செயலகம் | 01 நாள் |
| 10 | வடிவ கோவைகளை இற்றைப்படுத்தல், கியூ.ஜீ.ஐ.எஸ் பயிற்சி | 13 உத்தியோகத்தர்கள் | காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள்; அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகம் - மட்டக்களப்பு | 03 நாட்கள் |
| 11 | பங்குபற்றும் அணுகுமுறை பயிற்சிக் கருத்தரங்கு | 30 உத்தியோகத்தர்கள் | உதவிப் பணிப்பாளர் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலர்கள்; அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலகம்- பதுளை | 02 நாட்கள் |
| 12 | திட்ட முன்மொழிவு எழுதுதல் | 05 உத்தியோகத்தர்கள் | உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) | இலங்கை அபிவிருத்தி நிறுவனம் | 05 நாட்கள் |
| 13 | ஆங்கில உயர் சான்றிதழ் பாடநெறி | 01 உத்தியோகத்தர்கள் | பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்) | இலங்கை திறந்த பல்கலைக்கழகம். | 06 மாதங்கள் |

# 04 நிதி முகாமைத்துவம்

## 4.1 செலவு மதிப்பீடு

| தொடர்இல- | முந்திய வருடம் (2015)சேமிப்பு | | | செலவு நூற்று வீதம் | நடப்பு வருடம் (2016) | | | செலவு நூற்று வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு | | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு | |
| கருத்திட்டம் 1 | | | | | | | | |
| வேதனங்கள் மற்றும் ஊதியங்கள் | 281,210,000 | 281,652,192 | 740,746 | 100.16 | **300,565,000** | **299,934,674** | **630,326** | **99.79** |
| ஏனைய மீண்டெழும் | 41,757,000 | 39,013,938 | 1,560,124 | 93.43 | **48,500,000** | **45,381,142** | **3,118,858** | **93..57** |
| மூலதனம் | | | | | | | 725,562.53 | |
| 2001 | 20,000,000 | 18,611,099 | 1,388,901 | 93.06 | **28,862,000** | **24,221,911** | **4,640,089** | **83..92** |
| 2002 | 1,800,000 | 528,103 | 1,271,897 | 29.34 | **1,900,000** | **1,862,971** | **37,029** | **98..05** |
| 2003 | 4,200,000 | 2,718,049 | 1,481,951 | 64.72 | **4,350,000** | **3,557,098** | **792,902** | **81..77** |
| 2102 | 3,000,000 | 2,489,252 | 510,748 | 82.98 | 2,500,000 | 2,180,223 | 319,777 | 87.21 |
| 2103 | 2,000,000 | 1,965,833 | 34,167 | 98.29 | 2,000,000 | 1,947,886 | 52,114 | 97.39 |
| 2105 | 32,000,000 | 27,698,096 | 4,301,904 | 86.56 | 28,400,000 | 27,891,979 | 508,021 | 98.21 |
| 2401 | 2,000,000 | 1,981,741 | 18,259 | 99.09 | 2,000,000 | 1,971,004 | 28,996 | 98.55 |
| 1.கருத்திட்டம் 1 | | | | | | | | |
| வேதனங்கள் மற்றும் ஊதியங்கள் | | | | | | | | |
| ஏனைய மீண்டெழும் | | | | | | | | |
| மூலதனம் | | | | | | | | |
| 2001 | - | - | - | - | - | - | - | - |
| 2002 | - | - | - | - | - | - | - | - |
| 2003 | - | - | - | - | - | - | - | - |
| 2101 | - | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | **387,967,000** | **376,658,303** | **11,308,697** | | **419,077,000** | **408,948,888** | **10,128,112** | |

அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணம் B கணக்கு

| எல்லைகள் | முந்திய வருடம் (2015) | | நடப்பு வருடம் (2016) | |
|---|---|---|---|---|
| | மதிப்பீடு | சரியான | மதிப்பீடு | சரியான |
| செலவு அதிக பட்ச எல்லைகள் | 20,920,000 | 22,205,301 | 21,000,000 | 20,906,777 |
| கடன் நிலுவை குறைந்த பட்ச எல்லைகள் | 10,920,000 | 15,029,000 | 11,000,000 | 17,107,683 |
| பற்று நிலுவை அதிக பட்ச எல்லைகள் | 65,000,000 | 55,149,226 | 67,000,000 | 58,948,321 |

## 4.2 பௌதீகவளங்கள் முகாமைத்துவம்

### அசையும் சொத்துக்கள்

| தொடர் இல. | சொத்துவகை | வருடஆரம்பநிலை | வருடத்தில்ஏற்பட்டமாற்றங்கள் | | | | வருடஇறுதியில் நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கையகப் படுத்தல் | கொள்வனவு | ஏலவிற்பனை | அகற்றுதல் | |
| 1 | பார வாகனங்கள் | - | - | - | - | - | - |
| 2 | கெப் வண்டி | 20 | - | - | - | - | 20 |
| 3 | மோட்டார் வாகனம் | 01 | - | - | - | - | 01 |
| 4 | வான் | 03 | - | - | - | - | 03 |
| 5 | ஜீப் | 12 | - | - | - | - | 12 |
| 6 | மோட்டார் சைக்கிள் | 0 | - | - | - | - | 0 |
| 7 | சைக்கிள் | 01 | - | - | - | - | 01 |
| 8 | பிரதி எடுக்கும் இயந்திரம் | 01 | - | - | - | - | 01 |
| 9 | நிழல் பிரதி எடுக்கும் இயந்திரம் | 31 | - | - | 01 | - | 30 |
| 10 | கீபோர்ட்(key board) | 173 | - | 08 | 05 | 04 | 172 |
| 11 | மவுஸ் (mouse) | 173 | | 08 | 01 | 12 | 168 |
| 12 | ஸபீக்கர் (Speaker system) | - | - | - | - | - | 0 |
| 13 | யுபீஎஸ் (UPS) | 173 | - | 16 | 09 | 14 | 166 |
| 14 | சீபீயு (CPU) | 173 | - | 8 | 05 | 01 | 175 |
| 15 | சிடி ரைட்டர் (CD Writer) | - | - | - | - | 02 | - |
| 16 | மொனிட்டர் (Monitor) | 173 | | 13 | 07 | 05 | 174 |
| 17 | கணினி அச்சு இயந்திரம் | 48 | - | 08 | 02 | 01 | 53 |
| 18 | லப்ரொப் கணிணி | 62 | - | 06 | - | - | 68 |
| 19 | தொலைநகல் இயந்திரம் | 32 | - | 02 | 03 | - | 31 |
| 20 | தட்டச்சு இயந்திரம் | 01 | - | - | - | 01 | 0 |
| 21 | பணக்காப்புப் பெட்டி | 01 | - | - | - | - | 01 |
| 22 | கமரா டிஜிரல் | 25 | - | 02 | 02 | - | 25 |
| 23 | வீடியோ கமரா | 02 | - | - | - | - | 02 |
| 24 | தொலைக்காட்சிப் பெட்டி | 0 | - | - | - | - | 0 |
| 25 | வானொலிப் பெட்டி | 01 | - | 01 | - | - | 02 |
| 26 | குளிர்சாதனப் பெட்டி | 24 | - | - | 01 | - | 23 |
| 27 | ஸ்கேனர் | 27 | - | - | 01 | - | 26 |
| 28 | மல்ரிமீடியா உபகரணங்கள் | 30 | - | 03 | - | - | 33 |
| 29 | ஜீ.பி.எஸ்உபகரணங்கள் | 113 | - | 41 | 03 | 02 | 149 |
| 30 | இணையத்தள வசதிகள்(ADSL) | 03 | - | - | - | 01 | 02 |
| 31 | ஸ்லைட் புறஜெக்டர் | 01 | - | - | - | 01 | 0 |
| 32 | றாக்கை | 03 | - | 07 | 01 | 02 | 07 |
| 33 | ஹார்ட் டிஸ்க் | 01 | - | 01 | | 01 | 01 |
| 34 | எழுதுவினைஞர் மேசை | 10 | - | 39 | 07 | 03 | 39 |
| 35 | கணினி மேசை | - | - | 17 | | | 17 |
| 36 | அலுமாரிகள் | 09 | - | 25 | 08 | 01 | 25 |
| 37 | நாற்காலிகள் | 72 | - | 116 | 66 | 06 | 116 |
| 38 | நீர்வடிகட்டி | - | - | 03 | - | - | 03 |
| 39 | அச்சு மற்றும் ஸ்கேனர் இயந்திரம் | - | - | 01 | - | - | 01 |
| 40 | சோபா செட் | - | 01 | - | - | - | 01 |
| 41 | மண்ணை முன்பின் இயக்கி குலுக்கும் கருவி | - | - | 01 | - | - | 01 |
| 42 | மின் கேத்தல் | 05 | - | 02 | 04 | 01 | 02 |
| 43 | ரைஸ் குக்கர் | - | - | 02 | - | - | 02 |
| 44 | மோட்டர் | - | - | 01 | - | - | 01 |
| 45 | எரிவாயு சிலின்டர் | - | - | 01 | - | - | 01 |
| 46 | கட்டில் | 03 | - | 01 | 03 | - | 01 |
| 47 | சாப்பாட்டு மேசை | - | - | 01 | - | - | 01 |
| 48 | பென்டிரைவ் | 05 | - | - | - | 05 | 0 |
| 49 | வரைபட கபினட் | 05 | - | 04 | 03 | 02 | 04 |
| 50 | நேர அட்டவணை இயந்திரம் | 01 | - | - | 01 | - | 0 |
| 51 | மின்விசிறி | 06 | - | 02 | 06 | - | 02 |

# 5.அபிவிருத்தி நடவடிக்கைகள்

## 5.1 பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல்

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதேச மட்டத்தில் காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை தயாரிப்பதற்கு முன்னுரிமை வழங்கியது. ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் இருக்கும் காணிப்பயன்பாடு மற்றும் காணிப் பயன்பாட்டு பிரச்சனைகளை இனங்கண்டு, அவற்றிற்கான காரணிகள் பகுப்பாய்வு செய்து, இப்பிரச்சனைகளை குறைப்பதற்காக அவசியமான மூலோபாய முன்மொழிவுகள் திட்டத்தில் முன்வைக்கப்படும். பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை செயற்திட்டத்தின் நோக்கம் நாட்டின் நிலவளத்தை வளங்குன்றாமல் பயன்படுத்த வழிகாட்டுதலாகும். எவ்வாறாயினும் பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள நிலங்களில் பெரும்பாலானவை ஏற்கனவே பயன்பாட்டிலிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் தற்போதுள்ள நிலப் பயன்பாட்டை மேம்படுத்தவும் பாதுகாக்க வேண்டிய பகுதிகளை பேணுவதற்கும் உதவும்.

இத்திட்டத்தின் கீழ் 2016ம் ஆண்டின் டிசெம்பர் மாத இறுதி வரை 262 திட்டங்கள் தலைமை அலுவலகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டது. பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டத்திலுள்ள பரிந்துரைகளை அமுலாக்கம் செய்வதற்காக 330 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது.2016ம் ஆண்டின் டிசெம்பர் மாத இறுதி வரை திட்டங்களை அமுலாக்கும் செயல் முன்னேற்றம் 100% ஆகும்.

**<u>2016ம் ஆண்டில் திட்டங்களை அமுலாக்கும் செயல் முன்னேற்றத்தைக் காட்டும் சிலபடங்கள்</u>**

**கேகாலை மாவட்டம் - கேகாலை**

பிரதேச செயலாளர் பிரிவு



ருவான்வெல பிரதேச செயலாளர் பிரிவு



களுத்துறை மாவட்டம் – அகலவத்த
பிரதேச செயலாளர் பிரிவு



களுத்துறை மாவட்டம் - களுத்துறை
பிரதேச செயலாளர் பிரிவு





குருநாகல் மாவட்டம் - மல்லவபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவு



குளியாப்பிட்டிய மேற்கு - பிரதேச செயலாளர் பிரிவு

## 5.2. மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு (கா.ப.தி.கு)

காணி உபயோகக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைவாக மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இவை மாவட்ட அலுவலகங்களால் ஒருங்கிணைக்கப்படுகிறது. இக் குழுவின் தலைவராக மாவட்ட செயலாளர் / அரச அதிபரும், செயலாளராக மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரும் செயலாற்றுவார்கள். இக்குழு வழமையாக மூன்று மாதத்திற்கொரு முறை கூட்டப்படும். ஆயினும் தேவையாயின் அரச அதிபரால் மேலதிகமாக குழுக்கூட்டம் கூட்டப்படலாம்.
குழுவினால் தீர்மானம் எடுப்பதற்கு சிக்கலான பிரச்சனையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் பிரச்சனை பற்றி விசேட ஆய்வினை மேற்கொள்ள அரச அதிபரால் குழு அங்கத்தவர்களைக் கொண்ட உப குழு அமைக்கப்படலாம்.

### மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் செயல் பங்கு

1. பயன்படுத்தப்படாத காணிகளை இனங்காணுதல், அவற்றை அறிவித்தல்
2. மாவட்டத்தில காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் துறையில் அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னுரிமையை நிர்ணயித்தல்.
3. நகர மற்றும் கிராமிய துறைகளில் எதிர்கால அபிவிருத்திக்கான இடங்களை இனங்காணுதல்.
4. மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகளுக்கான இடங்களை இனங்காணுதலும் அவற்றை விடுவிப்பதற்கு பரிந்துரை செய்தலும்.

கா.ப.தி.குவின் மேற்குறிப்பிட்ட பிரதான செயற்பாடுகளைத் தவிர மேலதிகமான செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளது.

1. மாவட்டத்திலுள்ள பிரதான காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளைப் பற்றி தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்கு தெரிவித்தல்.
2. பிரதேச மற்றும் கிராமிய மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டங்களிற்கான வழிகாட்டலை வழங்கல்.
3. காணிப் பயன்பாட்டுத் திட்டங்களுக்காக மாவட்ட மட்டத்தில் காணிப் பயன்பாடு பற்றிய தகவல் முறைமையை உருவாக்கல்.
4. காணிப் பயன்பாட்டுத் திட்டங்கள் அமுல்படுத்தலை கண்காணித்தல்.
5. சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் காணிப் பயன்பாட்டு செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
6. பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டங்களின் பரிந்துரைகளை கலந்துரையாடி அனுமதித்தல்.

**<u>2016ல் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு</u>**

அம்பாறை மாவட்டம்



கிளிநொச்சி மாவட்டம்



மாத்தளை மாவட்டம்



பதுளை மாவட்டம்



**மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் அமைப்பு**

1. மாவட்ட செயலாளர்/ அரச அதிபர் - தலைவர்
2. பிரதேச செயலாளர்கள்
3. உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) - செயலாளர்
4. மாகாண காணி ஆணையாளர்/ உதவி காணி ஆணையாளர்
5. பிரதிப் பணிப்பாளர் (விவசாய விரிவாக்கம்)
6. மாவட்ட வன உத்தியோகத்தர்
7. நில அளவை கண்காணிப்பாளர்
8. உதவி ஆணையாளர் – கமத்தொழில் சேவைகள்
9. பிரதிப் பணிப்பாளர் - நீர்ப்பாசனம்
10. உதவி காணி ஆணையாளர் -உள்ளூராட்சி
11. உதவிப் பணிப்பாளர் – ஏற்றுமதிப் பயிர்கள்
12. முகாமையாளர் – தேயிலை சிறுதோட்ட சொந்தக்காரர் அதிகாரசபை
13. பிரதிப் பணிப்பாளர் – இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
14. பிரதேச முகாமையாளர் – தெங்குப் பயிர்ச்செய்கை சபை
15. உதவிப் பணிப்பாளர் – மத்திய சுற்றாடல் அதிகாரசபை

தேவை ஏற்படின் அரச அதிபரினால் ஏனைய திணைக்களங்கள்/ நிறுவனங்களிலிருந்து மேலதிமாக அங்கத்தவர்களை நியமிக்கலாம்.
2016ம் ஆண்டில் 55 மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக் கூட்டங்கள் நடாத்த இலக்காகக் கொள்ளப்பட்டபோதும் 64 குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுக் கூட்டத்திற்கும் ரூபா.3000/= ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 5.3. பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழு (பி.கா.ப.தி.கு)

அந்தந்த மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் வழிகாட்டலில் பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு செயற்படுகிறது. காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் நடவடிக்கைகள் பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற்; குழுவின் ஒருங்கிணைப்புடன் மேற்கொள்ளப்படும். பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற்; குழுவின் தலைவராக பிரதேச செயலாளரும், செயலாளராகவும், குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரும் செயலாற்றுவார்கள்.

**பிரதேசமட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் செயல்பங்கு**

1. பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடலுக்கு உதவுதல் மற்றும் அமுலாக்கல் நடவடிக்கைகள்
2. காணிப் பயன்படுத்தலில் முன்னுரிமையான காணிகளை இனங்காணுதல்.
3. காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளை இனங்காணுதல் அவற்றிற் கான பரிந்துரைகளைச் செய்தல் தேவையாயின் மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்கு முன்வைத்;தல்.
4. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பரிந்துரைகளின் அடிப்படையில் குறுகிய கால மற்றும் நீண்டகால செயற்திட்டங்களை தயாரித்தல். இத்திட்டம் பிரதேச மட்ட வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.
5. தேவையான போது மாவட்ட மற்றும் தேசிய மட்ட குழுவிற்கு பரிந்துரைகளை வழங்குதல்
6. காணி பராதீனப்படுத்தல் மற்றும் காணி ஒதுக்கீடு செய்தல், காணிக் கச்சேரிகளை நடாத்தல் ஆகியவற்றிற்கு பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் குழுவினூடாக அவசியமான பரிந்துரைகளை வழங்குதல்
7. அரச செயற்பாடுகளுக்காக காணி கையகப்படுத்தலுக்கு குழுவினூடாக பரிந்துரைகளை வழங்குதல்
8. கிராம மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவிற்கு வழிகாட்டல்
9. எதிர்கால அபிவிருத்திக்காக பிரதேசத்திலுள்ள காணிகளை இனங்காணுதல்.
10. பல்வேறு பாவனைகளுக்கும் காணிகளை ஒதுக்கீடு செய்யும் போது காணிப் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் பரிந்துரைகளை வழங்குதல்
11. பிரதேச மட்டத்தில் காணிப் பயன்பாடு பற்றிய தரவுகளை

    உருவாக்கல்,அதனை மாவட்ட தரவு அடிப்படையுடன் இணைத்தல்

### பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுவின் அமைப்பு

1. பிரதேச செயலாளர் - தலைவர்
2. காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் - செயலாளர்
3. காணி உத்தியோகத்தர்/ குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர்
4. விவசாயப் போதனாசிரியர்
5. பெரும்பாக உத்தியோகத்தர் – கமத்தொழில் சேவைகள்
6. வன உத்தியோகத்தர்
7. உதவி நில அளவை கண்காணிப்பாளர்
8. விரிவாக்க உத்தியோகத்தர் (தேயிலை/தென்னை/இறப்பர்)
9. கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்
10. சுற்றாடல் உத்தியோகத்தர்
11. விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதி.
12. பெருந்தோட்டத் துறையின் பிரதிநிதி
13. சம்பந்தப்பட்ட அரச முகவர் அமைப்புகளின் பிரதிநிதி.

2016ம் ஆண்டில் 331 மாவட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக் கூட்டங்கள் நடாத்த இலக்காகக் கொள்ளப்படடு 392 கூட்டங்கள் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு குழுக் கூட்டத்திற்கும் ரூபா. 1500/= ஒதுக்கீடு செய்யப்பட்டது. சில பிரதேச செயலாளார் பிரிவுகளில் அக்கூட்டம் பிரதேச விவசாய குழுக் கூட்டத்துடன் சேர்த்து நடாத்தப் பட்டதனால் ஒதுக்கீடு முழுவதும் பயன்படுத்தப்படவில்லை.

**<u>2016 இல் நடாத்தப்பட்ட பிரதேச மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழு</u>**



யாழ்ப்பாண மாவட்டம் - நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு



கிளிநொச்சிமாவட்டம் - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவு

### 5.4 தேசிய காணிப் பயன்பாடு பற்றிய ஆய்வு

இலங்கையில் இற்றைப்படுத்தப்பட்ட காணிப் பயன்பாடு பற்றிய தகவல்கள் இல்லாதிருப்பது காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலிற்கு அடிப்படை பிரச்சனையாகும். ஆகையால் கா.ப.கொ.தி.தி இனால் விஷேட செயற்பாடாக காணிப் பயன்பாடு இற்றைப்படுத்தல் பொதுவான வழிகாட்டுதலுக்கமைய நாடு முழுவதற்கும் செய்யப்படுகிறது. இற்றைப்படுத்தப்பட்ட காணிப் பயன்பாடு பற்றிய தகவல்கள் இல்லாதிருப்பது திணைக்களங்கள், நிறுவனங்கள், அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையாகும். இத்திட்டத்தின் ஊடாக இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதன் மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வு காணவும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயற்பாடுகளை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தில் ஒவ்வொரு ஐந்து வருடத்திலும் இற்றைப்படுத்தப்படும். தீவின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாக எல்லாமாக 1830 வரைபட தாள்கள் (1:10,000 அளவுத் திட்டத்தில்) உள்ளது. இவற்றில் 2016ம் ஆண்டு டிசெம்பர் இறுதி வரையில் 1519 வரைபட தாள்களின் வெளிக்கள வேலைகள் நிறைவு செய்யப்பட்டு அவற்றில் 739 வரைபட தாள்கள் டிஜிரைஸ் செய்யப்பட்டுள்ளது.

### 5.5 நீர் மூலங்கள் மற்றும் நீரூற்றுக்களை அடையாளங் காணல்

இலங்கையின் முக்கியமான இயற்கை வளங்களில் ஒன்று நீர் ஆகும். அது பண்டைக்காலம் முதல் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் காரணிகளில் ஒன்றாக விளங்குகிறது. பல்வேறு நீர்ப்பாசனங்கள் மூலம் குறிப்பாக பண்டைக்காலம் முதல் இந்நாள் வரை விவசாயப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்கிறது. இலங்கையின் நீர்வளம் கைத்தொழில், சேவைகள், குடிநீர்த் தேவைகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள், சுற்றுலா மற்றும் நீர்மின் உற்பத்தி ஆகியவற்றிற்கு முக்கியம் வாய்ந்ததாகும். எனவே நீர் வளங்களை பாதுகாத்தல், பேணுதல் மற்றும் அவற்றின் வளங்குன்றாத இருப்பு, அவற்றின் நீரேந்து பிரதேசங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்கள் ஆகியன நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமல்லாது பல்லுயிர்த்த பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலை ஆகியவற்றிற்கும் முக்கியமானது. இதனை அடைவதற்காக பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் வழிநடத்தலில் அனைத்து வகையான நீர் மூலங்களையும் அவற்றின் ஒதுக்கப்பட்ட இடங்களையும் பாதுகாத்தல் மற்றும் பேணுதல் தொடர்பாக அவசியமான தேசிய கொள்கை வரையப்பட்டு அமைச்சரவையால் அனுமதிக்கப்பட்டது. இக்கொள்கை கடந்த ஆண்டு 22.12.2014 திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் இல.1894/3 மூலம் வெளியிடப்பட்டது.

நீர்வளங்களை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நீர்வளங்களின் அமைவிடங்கள்; 18 மாவட்டங்களில் அடையாளங் காணப்பட்டு அவற்றின்; விபரங்களடங்கிய அறிக்கை தயாரிக்கப்பட்டு 2015ல் மாவட்டச் செயலாளர்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் அடிப்படையில் மா.கா.ப.தி.கு வினால் பாதுகாக்கப்பட வேண்டிய நீர்வளங்கள் அடையாளங்காண வெளிக்கள வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. இவ் அறிக்கையின் அடிப்படையில் தேசிய சுற்றாடல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக பிரகடனப் படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு இத்தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. இக்கொள்கையை அமுல்படுத்துவதற்காக கொள்கையை தயாரிப்பதில் பங்களித்த நிறுவனங்களின் பங்குபற்றலுடன் 2015 நவம்பர் 14ம் திகதி பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டது.

இக்கொள்கையினை அமுல்படுத்துவதன் மூலம் ஆறுகள் மற்றும் நீரோடைகளின் ஒதுக்கப்பட்ட இடங்களையும் அடையாளங் கண்டு வரைபடம் வரையப்பட்டு அவற்றினை பாதுகாக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நீர் வளங்களையும், நீரூற்றுகளையும் பாதுகாப்பதற்காக 2016ல் மாவட்டத்திற்கு ஒன்று என 25 திட்டங்கள் இலக்காக கொள்ளப்பட்டு அவை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப் பட்டுள்ளது.

**பதுளை மாவட்டம் - ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவு**

பாதுகாப்பு நடவடிக்கைக்கு முன் பாதுகாப்பு நடவடிக்கைக்கு பின்





மண் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்ச்சி



குருநாகல் மாவட்டம் - மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவு



குருநாகல் மாவட்டம் - அளவ்வ பிரதேச செயலாளர் பிரிவு

## 5.6 கிராம மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செயல்முறை அமுலாக்கம்

இத்திட்டத்தின் நோக்கம் கிராம சேவையாளர் பிரிவுகளில் காணப்படும் காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தெரிவு செய்து அல்லது கிராமத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு விஞ்ஞான ரீதியிலான காணிப் பயன்பாட்டிற்கு வழிகாட்டுதலாகும். கிராம மட்டத்தில் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் குழுவை ஸ்தாபித்து காணிப் பயன்பாட்டாளர்களின் உதவியுடன் காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகள் அடையாளங் காணப்படும். காணிப் பயன்பாடு தொடர்பான பிரச்சனைகள் ஆராயப்பட்டு பங்காளர்களின் உதவியுடன் திட்டத்தை அமுல்படுத்தப்படுவதனூடாக நிலத்தின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படும் .ஆயினும் இத்திட்டத்தில் மண் பாதுகாப்பு மற்றும் சேதனப் பசளைகளை பாவித்தல் ஊக்குவிக்கப்படுவதுடன் உணவுப் பயிர்கள் மற்றும் பணப் பயிர்களுக்கு மாற்றுப் பயிர்ச் செய்கையும் அறிமுகப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் குறிக்கோள் கிராமத்தில் காணிப் பயன்பாட்டாளர்களின் பொருளாதார நிலையினை விருத்தி செய்தலும் குடும்பத்தின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தலும் ஆகும். இது நிலவளத்தின் வளங்குன்றாத நிலையினையும் தனிப்பட்ட வளர்ச்சியினையும் உறுதி செய்யும்.

இத்திட்ட முன்மொழிவை காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரினால் உருவாக்கப்பட்டு மாவட்ட அலுவலகத்தினூடாக தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும். திட்டம் அனுமதிக்கப்பட்ட பின் உதவிப் பணிப்பாளர் (மாவட்ட காணிப் பயன்பாடு) இன் மேற்பார்வையில் அமுல்படுத்தப்படும். 2016ம்ஆண்டில் 50 கிராமங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டு வருட முடிவில் யாவும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. 2016ல் ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூபா 50,000/= ஒதுக்கப்பட்டது.

## 2016ல் அமுலாக்கப்பட்ட கிராம மட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் செய்துகாட்டல்

கொழும்பு மாவட்டம் - சீதாவக்கை பிரதேச செயலாளர் பிரிவு



களுத்துறை மாவட்டம் - பாலிந்தநுவர பிரதேச செயலாளர் பிரிவு



குருநாகல் மாவட்டம் - உடுபத்தாவ பிரதேச செயலாளர் பிரிவு



குருநாகல் மாவட்டம் - மாஸ்பொத பிரதேச செயலாளர் பிரிவு



## 5.7 தரமிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம்

தவறான காணிப் பயன்பாடு அல்லது மோசமான முகாமைத்துவம் ஆகிய காரணங்களால் விவசாய காணிகள் தரமிழக்கப்படும் அல்லது அவற்றின் உற்பத்தித்திறன் நிரந்தரமாக குறைவடையும். ஆகையால் இத்திட்டத்தின் கீழ் தரமிழந்த விவசாயக் காணிகளை அபிவிருத்தி செய்வதற்கான உபாயங்கள் அறிமுகப்படுத்தப்படும் அத்துடன் விவசாய குடும்பங்களின் வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படும்.

நிலம், மண், தாவர வகை மற்றும் நீர் பாதுகாக்கப்படும். பயிரிடப்படும் பயிர்களின் விளைச்சல் அதிகரிக்கும். குறைவான பயன்பாட்டிலுள்ள நிலங்களை சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் வளங்குன்றாத நிலை பராமரிக்கப்படும். இது விவசாயிகளுக்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்கும் .2016ம் ஆண்டில் 25 தரமிழந்த காணிகளை புனரமைப்பதற்கான திட்டம் இலக்காகக் கொள்ளப்பட்டு சகல திட்டங்களும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

**<u>2016ல் அமுல்படுத்தப்பட்ட தரமிழந்த காணிகள் புனரமைப்பு</u>**

பதுளை மாவட்டம்

பாதுகாப்பு நடவடிக்கைன்கு முன்



விழிப்புணர்ச்சி நிகழ்ச்சி



பாதுகாப்பு நடவடிக்கையின் போது



பாதுகாப்பு நடவடிக்கைக்குப் பின்



மீககாஉல பிரதேச செயலாளர் பிரிவு



களுத்துறை மாவட்டம் - அகலவத்தை பிரதேச செயலாளர் பிரிவு



மாத்தறை மாவட்டம் – மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவு

## 5.8 பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வுக் கூட்;டம் நடாத்தல்

இத்திட்டத்தின் நோக்கம் நில வளத்தை எதிர்கால சந்ததியினருக்காக வளங்குன்றாமல் பயன்படுத்தல் பற்றி பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துதலாகும். நிலவளத்தை வளங்குன்றாமல் பயன்படுத்தல் பற்றிய விழிப்புணர்வை பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துவது தகவலை கிராமத்தில் உட்செலுத்த தற்போதைய மற்றும் எதிர்காலத்திற்கான முதலீடு ஆகும். காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் விடயம் உயர்தர புவியியல் பாடத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளதனால் இத்திட்டம் பாடசாலை பிள்ளைகளுக்கு மிகவும் பயனுள்ளதுமாகும். இது தவறான காணிப் பயன்பாட்டை குறைப்பதற்கும், பயன்படுத்தப்படாத காணிகளை பயன்படுத்தவும், குறைந்த பயன்பாட்டிலுள்ள காணிகளை மேம்படுத்தவும், மண், தாவர வகை மற்றும் நீர் ஆகியவற்றை பாதுகாக்கவும் உதவும். மேலும் சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதால் மக்களின் மனப்பான்மையை மாற்ற உதவும்.

2016ம் ஆண்டில் 331 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்த இலக்காகக் கொள்ளப்பட்ட போதிலும் 333 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது. ஓவ்வொரு செயல்முறை விளக்கத்திற்கும் ரூபா 3,000/= ஒதுக்கப்பட்டது.

**<u>2016ம் ஆண்டில் பாடசாலை பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வு கூட்டங்கள்</u>**

களுத்துறை மாவட்டம் - தொம்பகொட சீலரத்ன ம.வி.



மட்டக்களப்பு மாவட்டம்- கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு



கண்டி மாவட்டம் -தொழுவ உடதெல்தோட்ட ம.வி.



ஹம்பாந்தோட்டை மாவட்டம் –கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவு



## 5.9 விசேட திட்டங்கள்

மாவட்டம், பிரதேசம், கிராமம் ஆகிய எந்தவொரு மட்டத்திலும் குறிப்பிட்ட காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக விசேட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. விசேட ஆய்வுகளை மேற்கொள்வதற்கான முன்மொழிவுகள் படைப்பாற்றலினை கருத்திற் கொண்டு தலைமை அலுவலகத் தினால் அனுமதிக்கப் படுகிறது. 2016ம் ஆண்டில் 25 திட்டங்கள் இலக்காகக் கொள்ளப்பட்டதில் 24 ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டது.

**குருநாகல் மாவட்டம் -பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவு**







## 5.10 ஏனைய திட்டங்கள்

### (i) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் காணிப் பயன்பாட்டுத் திட்டம் உருவாக்குதல்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (க.பா.ந.ஆ) பரிந்துரையின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்கு மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டம் உருவாக்குதலுக்கான வேலைகள் தேசிய மட்ட நிபுணர் குழுவின் வழிகாட்டலுடன் மாவட்ட நிபுணர் குழு நியமிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. திட்டமிடல் நடவடிக்கைகள் 2013, 2014, 2015 இல் மேற்கொள்ளப்பட்டது.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பந்தி 9.152ல் பரிந்துரைக்கப்பட்டவாறு வடக்கு மற்றும் கிழக்கின் 08 மாவட்டங்களிற்கும் காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. தற்போதையதும் எதிர்காலச் சந்ததிகளின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் நோக்குடன் சுற்றுச்சூழல் மற்றும் உயிரியல்-பன்மைத்துவம், நிலையான பொருளாதார அபிவிருத்தி, ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு தரங்கள், மத, கலாச்சார மற்றும் தொல்லியல் புராதனத் தலங்கள் என்பவற்றைப் பாதுகாக்கும் முகமாக காணிப் பாதுகாப்பு மற்றும் பராதீனப்படுத்தலில் மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்டுவதற்காக இத்திட்டம் உருவாக்கப்படுகிறது.

திட்டமிடல் செயற்பாடுகளில் வெளிக்கள வேலைகள் 2015ல் நிறைவுசெய்யப்பட்டுள்ளது.08 மாவட்டங்களிற்குமான காணிப் பயன்பாட்டுத் திட்டம் அந்தந்த மாவட்ட செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டது.

### (ii) "புனருதய" தேசிய சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டம்

"புனருதய" தேசிய சுற்றுச் சூழல் பாதுகாப்புத் திட்டம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஈடுபாட்டுடன் ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்படும் நிதி உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது. நிலத்தை பாதுகாக்கவும் பேணவும், நிலப் பயன்பாட்டை மேம்படுத்தவும் 11 மாவட்டங்களில் 44 திட்டங்களை 44 பிரதேச செயலக பிரிவுகளில் செயற்படுத்த நிதி வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டத்தில் இரத்தினபுரி மாவட்டத்திற்கு 05 மில்லியன் நிதி வழங்கப்பட்டது.

நுவரெலியா மாவட்டம் - நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு





நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவு- இசுறுவெவ புனரமைப்பு

இரத்தினபுரி மாவட்டம் - ஒபநாயக பிரதேச செயலாளர் பிரிவு அரம்பேஓயா





இரத்தினபுரி மாவட்டம் - கொலன்ன பிரதேச செயலாளர் பிரிவு அத்துருலியத்த அருவி





(iii) மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிதி உதவியுடன் கலாஓயா படுகையில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 06 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உயிரியல் பல்வகைத் தன்மையினை பாதுகாக்கவும் சூழல் அமைப்பு சேவைகளின் அடிப்படைத் தேவைகளை உறுதி செய்யவும் காணிப் பயன்பாட்டுத் திட்டம் தயாரித்தல்.

(iv) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நிதி உதவியுடன் வெலிஓயா நீரேந்து பிரதேசத்தை உள்ளடக்கும் பதுளை மொனராகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பகுதிகளில் காணிப் பயன்பாடு வகைப்படுத்தல் மற்றும் காணி இயல் தகவு வரைபடங்கள் தயாரித்தல்.

(v) திறைசேரியின் நிதியை உபயோகித்து இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் உதவியுடன் செயன்முறைகளை மீள்பொறியியல் முறையில் மீள நிர்மானித்தல்.

## 5.11 வருடாந்த செயற்திட்டத்தைப் பற்றி கலந்துரையாட பயிலரங்கு நடாத்தல்

மாகாண மட்டத்தில் 2017ம் ஆண்டின் செயற்திட்டத்தைப் பற்றி கலந்துரையாட 9 பயிலரங்குகள் 2016ம் ஆண்டு இறுதிக் காலாண்டில் நடாத்தபட்டது. சகல உத்தியோகத்தர்களும் (மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள்) பங்குபற்றினார்கள்.

**மாகாண மட்டத்தில் பயிலரங்கு -2016**

கிழக்கு மாகாணத்தில் பயிலரங்கு





**வடமத்திய மாகாணத்தில் பயிலரங்கு**





## 5.12 மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம்

மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளதுடன் மேலும் விளக்கம் வரைபு மூலம் காட்டப்பட்டுள்ளது. .

### மாவட்ட மட்டத்தில் திட்டங்களின் முன்னேற்றம்

**மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய சுருக்கம் -2016**

| திட்டம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| மாவட்ட காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கள் | 55 | 64 |
| பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டமிடற் குழுக்கள் | 331 | 392 |
| கிராம மட்டத்தில் காணிப்பயன்பாட்டுத் திட்டம் | 50 | 50 |
| தரமிழந்த நிலங்களுக்கு தணிக்கும் திட்டங்கள் | 25 | 25 |
| பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமூகத்திற்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 331 | 333 |
| விஷேட திட்டங்கள் | 25 | 24 |
| தேசிய காணிப் பயன்பாடு பற்றிய ஆய்வு | 1830 | 1519 |
| நீர் மூலங்கள் மற்றும் நீரூற்றுக்களைப் பாதுகாத்தல் | 25 | 25 |
| பிரதேச காணிப் பயன்பாட்டுத் திட்டத்திலுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்தல் | 330 | 330 |

**மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றம் பற்றிய சுருக்கம்**

